கொழும்புப் பல்கலைக்கழகம்

கலைப்பீடம்

கலைமாணி மூன்றாம் ஆண்டுப்பரீட்சை (பொருளியல்) 2018

அரையாண்டு இறுதிப்பரீட்சை

**ECN 3265** நிதிச் சந்தைகள்

அனுமதிக்கப்பட்ட காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடைதருக

---

1.

i. ஒரு பொருளாதாரத்தில் அருமையான நிதிவளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதில் நிதிச்சந்தைகளின் முக்கியத்துவத்தினைக் கலந்துரையாடுக. (13 புள்ளிகள்)

ii. இலங்கையில் பிணையங்களின் சந்தையில் ஏற்பட்ட அண்மைய அபிவிருத்திகளையும் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது அவற்றின் விளைவுகளையும் நுணுக்கமாக மதிப்பிடுக. (12 புள்ளிகள்)

2.

i. தேவைப்படுமிடத்து பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி வட்டிவீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையிலான தொடர்பினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. (12 புள்ளிகள்)

ii. ஒரு முதலீட்டாளர் தனது வணிக முயற்சியின் பொருட்டு 9% வருடாந்த வட்டி வீதத்தில் 500,000 ரூபாவை ஐந்து வருட காலப்பகுதிக்குக் கடனாகப் பெறவிரும்புகிறார். ஐந்து வருட முடிவில் கடன் மீளச் செலுத்தப்படும். ஐந்து வருட முடிவில் முதலீட்டாளர் செலுத்த வேண்டிய பெறுமதியைக் கணிப்பிடுக. (13 புள்ளிகள்)

3.

i. கடந்த நான்கு வருட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள திறைசேரி உண்டியல்கள் திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

ii. பிணையங்களின் விலைக்கும் வட்டி வீதத்திற்கும் இடையிலான தொடர்பின் தன்மையினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. உமது விடையினை விளக்க ஒரு உதாரணத்தைப் பயன்படுத்துக. (10 புள்ளிகள்)

4.

i. ஒரு முதலீட்டாளர் வீடொன்றைக் கொள்வனவு செய்ய 15% வருடாந்த வட்டி வீதத்தில் வங்கியொன்றிடமிருந்து 500,000 ரூபாவை ஐந்து வருட காலப்பகுதிக்குக் கடனாகப் பெற முடிவு செய்கிறார். எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கவீதம் 7% ஆகும். வருட முடிவில் பணவீக்கவீதம் 12% ஆக இருந்தது. கடன் பெற்றவருக்கும் கடன் கொடுத்தவருக்கும் இதனால் ஏற்படும் தாக்கத்தை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

ii. "உயர் வட்டிவீதங்கள் வெளிநாட்டு நிதி முதலீடுகள் ஊடாக நாணயமாற்றுவீத பெறுமதி உயர்வுக்கு இட்டுச் செல்லும்". இக்கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடையை விளக்குக. (07 புள்ளிகள்)

iii. "பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் ஒரு நாட்டின் அரசியல் உறுதித்தன்மையுடன் உயர்ந்த உணர்திறன் கொண்டவையாகும்" இக்கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடையை இலங்கையை உதாரணமாகக் கொண்டு விளக்குக. (08 புள்ளிகள்)

5.

i. எருதுகளின் சந்தை மற்றும் கரடிகளின் சந்தை ஆகிய எண்ணக்கருக்களை நீர் எவ்வாறு விளக்குவீர்? (08 புள்ளிகள்)

ii. ஒரு வருட முதிர்வு கொண்ட கழிவீடு செய்யப்பட்ட பிணையமொன்றை 850 ரூபாவுக்கு நீர் கொள்வனவு செய்வதாகக் கருதுக. பிணையத்தின் முகப் பெறுமதி 1000 ரூபாவாகும். பிணையத்தின் விளைவு வீதத்தை கணிப்பீடுக. (08 புள்ளிகள்)

iii. வட்டி வீதம் 13% ஆயின் ஐந்து வருட முதிர்வு கொண்ட கழிவீடு செய்யப்பட்ட ரூபா 100,000 பெறுமதியான பிணையத்திலிருந்து ஒரு முதலீட்டாளர் உழைக்கக்கூடிய தொகையினைக் கணிப்பிடுக.

(09 புள்ளிகள்)

6.

i. இலங்கைப் பொருளாதாரத்தில் தற்போதைய பிணையங்களின் நெருக்கடி (Bond Crisis)யின் பொருளாதார விளைவுகளை ஆராய்க (12 புள்ளிகள்)

ii. "நாணயமாற்றுச் சந்தையின் மிகையான தளம்பல்கள் நிதிமுறைமையின் உறுதிப்பாட்டிலும் பொருளாதாரச் செயற்பாட்டிலும் எதிர்கணியப் பாதிப்புக்களை ஏற்படுத்தும்" இக்கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடையை விளக்குக. (13 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்திற்கு (05)** சிறு விளக்கக் குறிப்புகள் எழுதுக.

i. பொருளாதாரத்தில் பணச்சந்தையின் தொழிற்பாடுகளும் முக்கியத்துவமும்.
ii. மெய்வட்டி வீதம்
iii. பிணையங்களின் முதனிலைச் சந்தை
iv. முதிர்வின் போதான விளைவு
v. பொருளாதாரத்தில் பங்குச் சந்தையின் தொழிற்பாடுகளும் முக்கியத்துவமும்
vi. சொத்துகள் மீதான கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள்
vii. நிகழ்காலப் பெறுமதி
viii. விளைவு வளையி
ix. நிதி நெருக்கடிகளுக்கான காரணிகள்

(ஒவ்வொன்றிற்கும் தலா 05 புள்ளிகள்)